மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

அ.வ.எண். 60/2017

| | | | |
|---|---|---|---|
| பெயர் | K.R.மணி | தொழில் | |
| தகப்பனார் பெயர் | இராமசாமி கவுண்டர் | வகுப்பு | |
| வயது | 65 | சமயம் | இந்து |
| நாள் | 25.07.2022 | கிராமம் | |
| சாட்சி | வா.சா.1 | | |

இன்று 25.07.2022 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை தொடர்ச்சி:–

நான் கடந்த 27.06.2022ம் தேதி அன்று நீதிமன்றத்தில் ஆஜராகி என் தரப்பு வழக்கை நிருபிக்கும் வகையில் எழுத்து பூர்வமான சாட்சிய வாக்குமூலத்தை தாக்கல் செய்து எனது தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்யப்பட்டது. தற்போது என் தரப்பு வழக்கை நிருபிக்க கூடுதல் ஆவணங்கள் **Ex.A16 முதல் Ex.A32** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. தாக்கல் செய்கிறேன். தாவாப்படி உத்தரவாக வேண்டுகிறேன். (1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் ஆட்சேபிக்கப்பட்டதன் அடிப்படையில் வா.சா.ஆ.16 முதல் வா.சா.ஆ.32 வரையிலான ஆவணங்கள் அதன் பின்தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்டுள்ளதால், அவையும் போலியாக தயாரிக்கப்பட்டவை என ஆட்சேபிக்கப்பட்டு மேற்படி ஆட்சேபனைக்கு வாதி தரப்பில் ஆட்சேபனைகள் செய்ய இயலாது என மறுத்துரைக்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.)

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா1ன் குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.